புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 46. TML1185 - மித்ராவின் கவிதைகளில் பெண்ணியம்

முனைவர் கி.பே.மோகனாம்பிகா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு–12

## முன்னுரை

பெமினிசம் என்ற ஆங்கிலச் சொல் பெமினா என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும் பெமினா என்ற சொல்லுக்கு பெண்ணின் குணாதிசயங்கள் என்பது பொருளாகும் முதலில் இச்சொல் பெண்ணின் பாலியல் குணாதிசயங்களை குறிப்பிட வழங்கப்பட்டு பின்பு பெண்களின் உரிமையை பேச பயன்பட்டது. 1889 ஆம் ஆண்டு பெண்களின் உரிமை தொடர்பான பிரச்சனைகளையும் அதன் அடிப்படையில் எழுந்த போராட்டத்தையும் உணர்த்த பயன்படுத்தப்பட்டது. பெண்ணியம் என்னும் குரல் அது வழங்கப்படும் இடத்திற்கும் காலத்திற்கும் பெண்களின் பிரச்சனைக்கும் ஏற்ப வெவ்வேறு பொருளை தருகின்றது.

பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதோடு சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதால் அதனை சமூக நிலை மாற்ற கோட்பாடு என்று அழைக்கிறார் சார்லட் பஞ்ச் என்ற பெண்ணியவாதி. பெண்ணியம் என்பது பெண்களின் பாலின வேறுபாட்டால் படும் துன்பங்களைஎதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் என்கிறார் புட்சர்

பெண்ணியம் என்கிற கோட்பாடு பெண்களை நவீனமயமாக்கும் சிந்தனையின் எழுச்சியாகும் மேலும் பெண்களுக்காக போராடி உரிமை பெற்று தருவது என்று பிரிட்டானிய கலைக்களஞ்சியம் கூறுகின்றது

## பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பெண்கள் தங்கள் அடிமைப்படுத்தப்படுகிறோம் என்பதை உணர்ந்து அதனை எதிர்த்துப் போராட துவங்கிய காலத்தை பெண்ணியத்தின் தோற்ற காலமாக கொள்ளலாம். பெண்ணிய வரலாற்றில் உலகெங்கு வாழும் பெண்கள் தமது உரிமைகளையும் பொறுப்புகளையும் தங்களுக்குரிய அந்தஸ்தையும் இழந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை உணர்த்த பெண்களே பெண்களுக்கான அமைப்புகளை உருவாக்கத் தொடங்கினர் பெண்கள் அமைப்புகளின் தொடர் போராட்ட வெளிப்பாடுதான் பெண்ணியமாக உருப்பெற்றது.

## உலக அளவில் பெண்ணியம் தோற்றம்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ஆம் நூற்றாண்டு மற்றும் இருபதாம் நூற்றாண்டிலும் ஏற்பட்ட மிகப்பெரிய உலகப்போரின் விளைவாக எழுந்தது பெண்ணியம். பெண்ணிய வரலாற்றில் இரு காலகட்டங்கள் முக்கியத்துவம் பெற்றவை. முதல் அலைப்பெண்ணியம் 1830–இல் அமெரிக்காவில் தோன்றியது இதன் விளைவாக பெண்கள் சொத்துரிமை ஓட்டுரிமை பெற்றனர். இரண்டாவது அலைப் பெண்ணியம் 1896 இல் தோன்றியது இதன் விளைவாக பல பகுதிகளிலும் பெண்ணிய போராட்டம் தோன்றியது ஆனால் பெண் விடுதலை முழு வடிவம் பெற்றது இருபதாம் நூற்றாண்டு ஆகும்

இந்தியாவில் தந்தை வழி சமுதாயம் தோன்றி பின் வேத காலத்தில் பெண் அடிமை கருத்துக்கள் நிறைவேற்றன வரலாற்று நோக்கில் இந்திய பெண்களின் நிலையை ஆராயும் போது தொடக்க காலத்தில் தாய்வழி குடும்ப அமைப்பு இருந்ததை அறியலாம். இக்காலகட்டத்தில் பெண்களின் நிலை மேம்பட்டிருந்தது. பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்து ஆணுக்கு அவள் மேல் அச்சமும் மதிப்பும் ஏற்பட காரணமாக அமைந்தது

ரிக் வேத காலத்தில் பெண்கள் ஆணுக்கு இணையாக கல்வி கற்பது, வேள்வி நடத்துவது, கவிதை இயற்றுவது போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர் புகழ்பெற்ற தத்துவவாதிகளான மைத்ரேயி கார்க்கி

போன்றோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். இதன் பின்னர் தோன்றிய வேதங்கள் பெண் அடிமைக்கு வித்திட்டன. மனுதர்மத்தில் பாலியல் விவாகம், விதவை மறுமணத் தடை, பெண்ணின் திருமண வயதை குறைத்தல், கணவனை தெய்வமாக போற்றி கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்பன போன்ற பெண்ணடிமை கருத்துகள் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்க காலத்தில் பெண்கள் நிலை கீழானதாக இருந்த போதும் பலர் வீராங்கனைகளாக திகழ்ந்தனர். 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிறிஸ்தவ மத வளர்ச்சி இந்துக்களிடம் தங்கள் மதத்தை காக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கவே அதில் பல சீர்திருத்தங்களை கொண்டு வந்தனர். இதில் பெண்கள் மேம்பாடும் அடங்கும் பெண்கள் தொடர்பான இந்து சட்ட திருத்தம் பெண் கல்வி இவற்றை வேண்டியும் குழந்தை மனம், உடன்கட்டை ஏறுதல், தேவதாசி முறை இவற்றை ஒழிப்பது குறித்தும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பெண்கள் இடையேயும் விழிப்புணர்வை ஊட்டினர்

**மித்ராவின் கவிதைகளில் பெண்ணியம்**

பெண்ணியம் தொடர்பான கருத்துக்களை இன்றைய புதுக்கவிதை ஆசிரியர்கள் பலர் தம் படைப்புகளில் வெளிப்படுத்தி வருகின்றனர் பெண்ணியம் தொடர்பான கருத்தாற்றலை வெளிப்படுத்துவதில் கவிஞர் மித்ரா அவர்கள் குறிப்பிடத்தக்கவராக திகழ்கின்றார். சமூகத்தில் பெண் ஒரு போகப் பொருளாக தான் பார்க்கப்படுகிறாள் கண்ணே மணியே முத்தே எனப் புகழ்வதெல்லாம் வெறும் காமத்தின் ஓசையே பெண் என்பவள் எவ்விதம் ஆண் சமூகத்தால் பார்க்கப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகிறாள் என்பதை தன் கவிதை வரிகளில் ஆழமாக சுட்டிக் காட்டுகிறார் கவிஞர் மித்ரா அவர்கள்

ஓவிய மேனிக்கு உடை தேடி ஒளி வீசும் கதிர் போல்
அணிகலன்கள் நிதம் தேடி காமப் பயிர் வளர்த்து
காதல் செய்து மாயும் காரிகையர் இன்று (காற்றின் சிறகுகள் ப–61)

என்று இன்று பெண்கள் வெறும் போக பொருளாக பார்க்கப்படும் விதத்தை சுட்டிக் நிற்கின்றது. மேலும் பெண்ணின் சுயமான ஆசைகள் உணர்வுகள் உரிமைகள் மறுக்கப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண் என்பவள் வெறும் போக பொருளல்ல அவள் சாதிக்க பிறந்தவள் அவள் விண்வெளி, ராணுவம், காவல் முதலிய பல்வேறு துறைகளில் இன்று சாதித்து வருகிறாள் என்ற கவிஞர் மித்ரா கூறுகிறார்.

ஆயக்கலைகளின் அழகு நயம் கண்டவர்
விண்ஏறி சந்திரனில் வெற்றிக்கொடி நாட்டுகின்றார்
ராணுவத்தில் உயர்பதவி இன்னும் காவல்துறையில்
கணக்கற்ற உயர்பதவி என உலகில்
சாதனைகள் பல நிகழ்த்தி சாதிக்கும் பெண்கள் கூட்டம் (காற்றின் சிறகுகள் ப–61)

ஆணினம் செய்யும் அனைத்து வேலைகளையும் பெண்ணாலும் செய்ய இயலும் எனவே பெண்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதை தன் கவிதை வரிகளால் வலியுறுத்துகின்றார்.

**சமத்துவம்**

சமத்துவம் என்பது வெறும் பேச்சு மனித இனத்தில் தான் எத்தனை வேற்றுமை உயர்ந்தவன் தாழ்ந்தவன். பணக்காரன் ஏழை. உயர் ஜாதி கீழ் ஜாதி எனப் பிரித்து கிடக்கும் சமுதாயத்தில் சமத்துவத்தை எப்படி பெறுவது இதற்கெல்லாம் விடை கிடைத்தால் கூட ஆண் பெண் சமத்துவத்தை பற்றிப்பேச முடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆண் பெண் சமன்பாட்டில் ஆண்டாண்டு காலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை கவிஞர் மித்ரா அவர்கள் ஆழமாக தனது கவிதையில் சாடுகிறார்.

ஆண்டாண்டு காலமாய்
மண்ணில் ஆமையாய் ஊமையாய்
அடங்கிக் கிடந்தது பெண்ணினம் அன்று (காற்றின் சிறகுகள் ப–132)

மேற்கண்ட கவிதை வரிகள் காலம் காலமாய் பெண்கள் எத்தகைய நிலையில் இருந்துள்ளனர் என்பதை ஆழமாகக் காட்டுகிறது பெண்ணை போக பொருளாக அடிமையாக நடத்திய மன்னர் காலத்தின் மங்கிய சிந்தனைகள் ஒளிந்து மாண்புகள் ஓங்க பெண்ணினம் விரைந்து நடை பயில்கிறது என்பதை தம் கவிதை வரிகளில் சொல்ல விளைகிறார் கவிஞர்

மன்னர் காலத்தில் மண்டிக் கிடந்த
அடிமை நிலை இன்று பெண்கள் வாழ்வில்
வந்து பேதமை விளைத்தது இன்று
அடிமை விலங்கொடித்து விடுதலைக்கு
விழிகளை உயர்த்து விரையுது பெண்ணினம். (காற்றின் சிறகுகள் ப–132)

என்ற வரிகளில் ஆண் பெண் சமன்பாட்டை நிலை நிறுத்தியுள்ளார் கவிஞர்

**வரதட்சனை கொடுமை**

*பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பல அதில் மீள இயலாதுன்பங்களும் பல. திருமணம் என்ற பந்தத்தில் பெண் வஞ்சிக்கப்படுகிறாள் கண் இருந்தும் குருடர்களாக காட்சியளிக்கப்படுகின்றனர். பெண்கள் திருமணம் பந்தத்தில் விலை கொடுத்து விற்கப்படுகின்றனர். பெண்கள் புகுந்த வீடு சென்று அங்கு நிம்மதியாக வாழ முடியாமல் தவிக்கின்றனர். தனது ஆசா பாசங்களுக்கு இடம் இன்றி வருந்துகின்றனர்.மேலும் வரதட்சனை கொடுக்க முடியாமலும் வாழ்வை நரகமாகக் கழிக்கின்றனர். பெண்கள் திருமணத்திற்கு வழங்கும் வரதட்சணை என்பது*

ஆண்மை பேராசை. பெண்மைக்கு இளைக்கும் கொடுமையின்
விளைவு இந்த வரதட்சணை கொடுமை மூலம் பெண்களின்
உடம்பு வெந்து போகின்றது (புதுக்கவிதையில் சமுதாயம் ப–249)

*என்கிறார் உண்ணாமலை. திருமணம் என்பது இரு மனங்கள் இணையும் நிகழ்வு திருமணத்தை வியாபாரமாக ஆக்குகிறது சமூகம் ஒரு பெண்ணை மணமுடிக்கும் அவளிடம் வரதட்சணை கேட்பது மிகக் கொடிய செயல் வரதட்சணையின் கொடுமையால் இன்று பல பெண்களின் வாழ்வு கேள்விக்குறியாக உள்ளது, திருமணப் பந்தத்தில் வரதட்சணை என்ற ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்திய சமூகத்தின் செயலை பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடு எனலாம் வரதட்சணையின் வன்கொடுமையினை கவிஞர் கவிதைகளில் சுட்டுகிறார். வரதட்சணையினால் பெண்கள் வாழ்வு இல்லற சிறையில் கழிகிறது என்கிறார்*

இன்று எங்கள் சீதைகள்
என்னற்ற ராமர்களின்
வரதட்சணை ஒப்பந்தத்தை
மீறியதால்
அவர்களின்
இதயக் கூட்டில் இருந்து
எடுத்து எறியப்பட்டு
இல்லற சிறைச்சாலையில்
நாளும்
சிறை வைக்கப்படுகிறார்கள் (தாகம் தீரா வானம்பாடிகள் ப–83)

*வரதட்சணை பிரச்சனையின் வன்கொடுமை சாடிய மித்ரா அவர்கள் அதற்கான தீர்வையும் கவிதைகளில் தருகிறார் அதாவது வரதட்சணை அரக்கனை ஒழிக்க கலப்பு மனமே தீர்வு என்கிறார்.*

வண்ணக் கனவுகளில் வலம் வரும் பெண்களை
வரதட்சணை அரக்கன் வாழ்வை முடிக்காமல்
கலப்பு மனத்தில் தரம் பற்றி நடக்க
இன்றைய இளைஞனே உன்னால் முடியும் (காற்றின் சிறகுகள் ப–128)

*பெண்களின் கொடுமைகளை மட்டும் கவிஞர் சுட்டிக்காட்டாமல் அதை தீர்க்கும் வழிமுறைகளையும் குறிப்பிடுவது அவரின் பெண்ணிய விடுதலை உணர்வினை வெளிப்படுத்துகின்றது.*

**சொத்துரிமை**

*பெண்களின் முன்னேற்றத்திற்கு கல்வி உரிமை எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு முக்கியம் சொத்துரிமை.பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்று பாவேந்தர் பாரதிதாசன் பல இடங்களில் தம் கவிதைகளில் குறிப்பிட்டுள்ளார். கவிஞர் மித்ரா அவர்களும் பாவேந்தரின் கருத்தை பாராட்டுவதோடு பெண்களுக்கு சொத்துரிமை கிடைக்க வேண்டிய அவசியத்தை தம் கவிதைகளில் எடுத்து இயம்புகிறார். சொத்துரிமை இருந்தால் வரதட்சணை பேயால் பெண் பாதிப்பது குறையும் என்ற கருத்தையும் கவிஞர் முன்மொழிகிறார்*

விரிவானின் சிறப்பு வீசுகின்ற வட்ட நிலை
பறிக்கின்ற மலர் சிறப்பு பாங்காக மணக்கின்ற
தன்மையினால் ,ஆழ்கடலின் சிறப்பெல்லாம் அது
வீசுகின்ற அலையினால் பெண்மையின் சிறப்பெல்லாம்
பெரும்பொருளின் திறத்தாலே, வெடிக்கின்ற
மலரில் தேன் குடிக்கின்ற வண்டுகள் போல்
வாழ்வு நடத்த வந்த பெண்ணிடமே ஞானமின்றி
பெரும்பணம் பறிக்கும் கொடுமை தீர

பெண்கள் எல்லாம் பெற வேண்டும் சொத்துரிமை
என்னும் சூத்திரத்தை கவிதையில் சொன்னவரே காற்றின் சிறகுகள் ப–132)

**பெண் சிசுக்கொலை**

*பெண் என்பவள் தாய்மையின் அடையாளம் பெண்ணிடம் மட்டுமே உயிரை உருவாக்கும் ஜீவசக்தி. ஆனால் அந்த ஜீவசக்தியில் ஆணை மட்டும் தான் பெற்று எடுக்க வேண்டும் என்ற நிலையை அந்த சமூகம் அவளுக்கு கட்டாயமாக்கி திணிக்கிறது. ஆணோ பெண்ணோ பிறப்பது எது என தீர்மானிக்கும் சக்தி அவளுக்கு இல்லை மீறி பெண் பிறந்தால் அந்த குழந்தை காரணம் அறியாமலேயே கொல்லப்படும். தாய் அந்த பெண் குழந்தை மனதளவில் நேசித்தாலும் கூட இந்த சமூகம் அதை வளர்க்க சம்மதிக்காது இந்த நிலையை கவிஞர் அவர்கள்*

பூக்களின் தேசத்தில்
மொட்டுகள் அருகும்
பெண் சிசுக்கொலை (புல்நுனிவைரங்கள் ப–146)

*தாய்வழி சமூகத்தின் உயர் தண்மை போய் தந்தை வழி சமூகத்தின் ஆதிக்கத்தை அழகாக காட்டியது கவிதை வரிகள். சமூக நியதியை மீறி தாய் பெண் குழந்தையை நேசிக்கும் நிலையையும் சுட்டிக் காட்டுகிறார்*

அரளிப் பூக்களை வெறுத்து
விதைகளை நேசிப்பாள்
கிராமத்துப் பெண் (புல்நுனிவைரங்கள் ப–157)

*பெண் குழந்தைகளை கள்ளிப்பால் ஊற்றிக் கொள்வது இச்சமூகம். இத்தகைய கொடிய சமூகத்தின் கட்டுப்பாட்டை மீறி பெண் குழந்தைகளை காக்க குழந்தைகளை விற்கும் நிலையும் காணப்படுகிறது. இதனை கவிஞர் மித்ரா அவர்கள் தம் கவிதைகளில் சுட்டுகிறார் இக்கவிதையில் குழந்தையை கொல்ல மனமின்றி தாய் தனது குழந்தையை விற்பனை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவதையும் சுட்டிக்காட்டுகிறார்*

கொல்ல மனமின்றி
குழந்தைகளை விற்கிறாள்
நவீன நல்லதங்காள் (புல்நுனிவைரங்கள் ப–156)

*பெண் குழந்தைகளை விற்கும் நிலை சமூகத்தில் தொடர்கிறது. மேலும் தொட்டில் குழந்தை திட்டம் என ஒரு திட்டம் உள்ளது அதில் உள்ள பெண் குழந்தைகளை யாரும் விரும்பி வாங்க வளர்க்க முன்வருவதில்லை எனவே அத்திட்டத்தால் பயனில்லை என்று கவிஞர் கூறுகிறார்.*

தொட்டில் குழந்தையைத்
தத்தெடுக்க யாருமில்லை
பெண் குழந்தை (புல்நுனிவைரங்கள் ப–167)

**பெண்ணுக்கு பெண்ணே எதிரி**

*ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணிற்கு எதிரியாக காணப்படுகிறாள். குடும்ப உறவில் காலம் காலமாக மாமியார் மருமகள் சண்டை தீராத பகையின் தொடர்ச்சியாகவே காணப்படுகிறது .இதனையும் கவிஞர் மித்ரா அவர்கள் தம் கவிதை வரிகளில் சாடுகிறார். மாமியாரின் கொடுமையினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு புழுவாக துடித்து வந்த மருமகள் ஒருநாள் பொங்கி எழுந்து மாமியாரை கொன்று விடுவாள் என்று கூறி மாமியார்களை அச்சுறுத்துகிறார் .கவிஞர்*

கொட்டிக் கொட்டி
புழுவும் குளவியானது
மாமியைக்கொன்ற மருமகள் (புல்நுனிவைரங்கள் ப–162)

**விதவை மணம்**

*ஒரு பெண் திருமண உறவில் பல்வேறு நிலையில் வஞ்சிக்கப்படுகிறாள். மனைவி இறந்தால் கணவனுக்கு மறுமணம் எளிமை. ஆனால் பெண்ணுக்கு அது இழுக்கு. சமூகம் அவளை வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கிறது. மறுமணம் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டாலும் சமூக ரீதியில் விலக்கி வைக்கப்படுகிறது என்பதையும் கவிஞர் சுட்டுகிறார் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதன் மூலம் தான் பெண்ணின் வாழ்வும் மீண்டும் தொடங்கும் என்றும் குறிப்பிடுகிறார்.*

முற்றுப் பெறும் புள்ளிகள்
உருவாகும் கோலம்
விதவை மணம் (புல்நுனிவைரங்கள் ப–161)

## மகளிர் இட ஒதுக்கீடு

*மகளிர் இட ஒதுக்கீடு என்பது சட்டரீதியாக சாத்தியம் என்றாலும் கூட அது கிணற்றில் போடப்பட்ட கல்லைப் போன்று தான் செயலற்று கிடக்கிறது. நாட்டில் பல்வேறு கட்சிகள் ஆட்சிக்கு வருகின்றன ஆனால் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா இன்னும் நிறைவேறவில்லை மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற முடியாமைக்கு காரணம் ஆணாதிக்க மனநிலையை முக்கிய காரணமாக அமைகிறது. எனவே மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்*

கிணற்றில் கல்
கிடக்கும் சலனமின்று
மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதா (புல்நுனிவைரங்கள் ப–57)

## பெண்ணிய விடுதலையின் அவசியம்

*பெண்ணிய விடுதலை என்பது இயக்க ரீதியிலான போராட்டம் என்பதை விட மனப் போராட்டம் என்பது உண்மை. மனித மனங்களில் மாற்றம் ஏற்படாமல் இயக்கங்களின் வழியில் என்ன சாதனையை பெற்றிட இயலும் என என்னத் தோன்றியது பெண்ணினம். தனது உரிமையை மீட்டெடுக்க பல தடைகள் இருப்பினும் தடை தகர்த்து தனது உரிமை பெற்றிடல் என்பது மனித இனத்தின் ஏற்றத்தாழ்விலா சமுதாயத்திற்கு அது வித்திடும் என்பார்கள் அறிஞர்கள். ஒரு நாட்டின் மனித வளம் அந்த நாட்டில் வளர்ச்சிக்கு பக்கபலமாக அமையும் அத்தகைய மனித வளத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பெண்ணை உரிமை பறித்து கலாச்சார சாயத்தில் வீட்டிற்குள் மூழ்க விடுதல் நியாயம் இல்லை அத்தகைய நிலையில் பெண்ணிய விடுதலை அவசியமாகிறது .பெண்ணிய விடுதலை முழக்கத்தில் கவிஞர் மித்ராவின் குரல் சற்று குறைக்கவே கேட்கிறது எனலாம். தம் கவிதைகளில் பெண்ணிய விடுதவையின் அவசியத்தை பல கோணங்களில் அலசி*

எங்கள் வாழ்வு பாதையில்
உறுதி ஊற்றுகள் நிதம்
பெருகி வருகின்றன
எழுச்சி நிழல் மரங்கள்
ஆங்காங்கே தலையாட்டி
புரட்சி கீதம் பாடுகின்றன
புதுமைக்கனி மரங்கள் கூடப்
பூத்துக் குலுங்குகின்றன
ஆணினமே
பெண்மையை வாழ விடுங்கள்
எண்ணங்கள் உயர்த்துங்கள் (தாகம் தீரா வானம்பாடிகள் ப–92)

*கவிஞர் மித்ராவின் இத்தகைய வரிகள் பெண்ணிய விடுதலை அவசியத்தை நேர்மறை சிந்தனையோடு விளக்கிச் செல்கின்றன.*

## பெண் விடுதலை

*பெண்ணியப் பார்வை என்பது சற்று ஆழமான விடை தேடி விளைவைத் தரும் முயற்சி. முயற்சி திருவினையாக்கும் என்பார்கள். முயல்வதின் தத்துவம் முடிவில் வெல்வது பெண்ணடிமை பாடி பாடி கலைத்தும் கூட தாகம் தீரா கவிஞர்களாக தேடல் கொண்ட மனிதர்களாக இன்றும் கூட நம்மில் சிலர் உள்ளனர். அத்தகைய கவிஞர்களில் ஒருவராக கவிஞர் மித்ரா அவர்கள் திகழ்கின்றார். பெண்ணடிமை தீர வழிகள் பலவற்றை தமது கவிதையில் பதிவேற்றம் செய்தவர். இத்தகைய சிறப்புடைய கவிஞர் அவர்கள் உழைக்கும் வர்கத்திற்காகவும் பெண்களுக்கான விடியலுக்காகவும் நான் பாடுகிறேன் என்று கூறுகிறார்*

உழைக்கும் வர்க்கமும்
பெண்ணினமும் என்றும்
தீர்வு காண முடியாது
கனவுகளையும் ஏக்கங்களையும்
கண்களில் சுமந்தபடி நடக்கும்
தாகம் தீர வானம்பாடிகளாக இருக்கும்
இவ் வர்க்கத்துக்காக
எந்நாளும் பாடுகின்றேன் (தாகம் தீரா வானம்பாடிகள் ப–110)

**பெண்மையை போற்றுவோம்**

*பெண் தான் மனித உறவின் ஜீவ சங்கிலி. அவளின்றி இவ்வுலக வாழ்வு நிறைவு பெறாது பெண்மையை போற்றுவதன் மூலம் நாம் வளமான புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். பெண்மையை போற்ற வேண்டியதன் அவசியத்தை தன் கவிதைகளில் கவிஞர் உயர்த்திப் பிடிக்கிறார் மேலும் பெண் குலத்தின் விடியலுக்காக பாடிய பாரதி பாரதிதாசன் ஆகிய இருவரையும் போற்றுகின்றார் கவிஞர் மித்ரா*

ஆணுக்குப் பின் ஆற்றலில் நிகர் என்ற பாரதி
ஆணுக்குப் பின் அனைத்திலும் நிகர் என்றார் பாவேந்தர்
அன்னையும் பெண் மகவு என்றால் அஞ்சுகின்ற
காலம் அது கண் விழித்துப் பார்க்கும் முன்பே
கல்லறையில் இடும் கருணையில்லா நீள் உலகு
கனிவோடு பெண் படைப்பை படைத்திட்ட பாவேந்தே
பார் உள்ளவரைப் பாவையர் உலகம்
நீ பாங்காக நிதம் வணங்கும். ( காற்றின் சிறகுகள் ப–48)

*என்று இன்று வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக பெண்ணியம் திகழ்கின்றது மக்களிடத்தில் மனமாற்றம் ஏற்பட வைக்கும் இத்துறையின் ஆற்றல் அளப்பரியது ஆகும் பெண்ணின் பிரச்சனைகளுக்கு பெண்களே தீர்வுகள் காண முடியும் என்ற நிலையை மித்ரா தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்*

*பெண்ணியம் என்பது உலகளாவியது. உலகில் உள்ள அனைத்து மனித குலத்துள்ளும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்கிறது. பெண்ணின் ஒற்றுமையின்மை இயக்க ரீதியாக பெண்கள் இணையாமை பெண்ணிய பின்னடைவுக்கு காரணம் எனலாம்.பெண்ணிய பிரச்சனைகளுக்கு நம் மன ரீதியான மாற்றமே போதுமானது. இன்றைய பெண்ணிய பிரச்சினைகளுக்கு பெண் கல்வி ஓரளவு மாற்றத்தை தரும் என்கிறார் கவிஞர் மித்ரா*

**துணை நூற்பட்டியல்**

தமிழண்ணல் –இலக்கிய உரை ,மீனாட்சி புத்தக நிலையம் ,மதுரை

தேவிரா – தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியம், நந்தினி பதிப்பகம், சென்னை

மித்ரா – தாகம் தீரா வானம்பாடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை

மித்ரா – காற்றின் சிறகுகள் ,அன்பு நிலா பதிப்பகம் ,வந்தவாசி

மித்ரா – புல்நுனி வைரங்கள், நியுசெஞ்சுரி பதிப்பகம், சென்னை